FWC

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## நான்காம் தவணைப் பரீட்சை - 2022
## Conducted by Field Work Centre, Thondaimanaru.
## 4rd Term Examination – 2022

| | | |
|---|---|---|
| அரசியல் விஞ்ஞானம் - I | Two Hours | 23 T I |
| Political Science - I | Gr -13 (2022) | |


சுட்டெண் :……………………

**அறிவுறுத்தல்கள்:**

- இவ் வினாப்பத்திரம் பகுதி A, பகுதி B, என்னும் இரு பகுதிகளைக் கொண்டுள்ளது.
- பகுதி A ஆனது 30 பல்தேர்வுவினாக்களையும், பகுதி B ஆனது 20 குறு விடை வினாக்களையும் கொண்டுள்ளது.
- இவை ஒவ்வொன்றுக்கும் தலா 02 புள்ளிகள் வீதம் மொத்தம் 100 புள்ளிகள் வழங்கப்படும்.
- அனைத்து பல்தேர்வு வினாக்களுக்கும் இவ்வினாப்பத்திரத்தில் ஒவ்வொரு வினாவிற்கும் என வழங்கப்பட்டுள்ள அடைப்புக்குறிக்குள் மட்டும் விடையின் இலக்கத்தை இடவேண்டும்.
- இவ் வினாக்களுக்கு விடையளிப்பதற்கு புள்ளிடித்தாள் (கூட்டுத்தாள்) அல்லது வேறு ஆவணங்களோ பயன்படுத்துதல் ஆகாது.
- B பகுதி வினாக்களுக்கு அவற்றின் கீழ் தரப்பட்டுள்ள புள்ளிக்கோட்டில் விடை எழுதுக.

## பகுதி - A

- **01 தொடக்கம் 20 வரையிலான வினாக்களுக்கு சரியான அல்லது மிகப்பொருத்தமான விடையை தெரிவு செய்க.**

01) அரசியல் என்பது
1) ஒழுக்க விழுமியக் கொள்கையினடிப்படையில் மேற்கொள்ளப்படுவதாகும்.
2) பிரஜைகளின் சமூகவாழ்வின் அன்றாட பிரயோகமாகும்.
3) அரசியல்வாதிகள் மற்றும் அரசியல் கட்சிகளின் தேர்தல் செயற்பாடு மட்டுமாகும்.
4) பொதுக் கொள்கை உருவாக்கம் மற்றும் அமுலாக்கம் என்பவற்றுடன் வரையறுக்கப்பட்டதாகும்.
5) அரச அதிகாரத்தை கைப்பற்றுவதை மட்டும் இலக்காக கொண்ட செயற்பாடாகும்.
(…..)

02) அரசியல் விஞ்ஞானம் என்பது
1) பிரயோக விஞ்ஞானத்தின் ஒரு பகுதியாக காணப்படுகிறது.
2) அரசியல் அதிகாரத்தையும் அரசியல் போட்டியையும் அடிப்படையாகக் கொண்ட செயற்பாடாகும்.
3) நெறிமுறைத் தத்துவங்களை நிராகரிப்பதுடன் விஞ்ஞான முறைகளுக்கு முக்கியம் அளித்துள்ளது.
4) சமூக விஞ்ஞானங்களுள் தலையாய விஞ்ஞானமாக கருதப்படுகின்றது.
5) பொதுக்கொள்கை உருவாக்க செயற்பாட்டை கற்பதுடன் மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. (…..)

03) அரசு என்பது
1) அரசியல் சமூக மொன்றின் இறைமை அதிகாரத்தை உடமையாக கொண்டதாகும்.
2) தெரிவிற்குரிய உறுப்புரிமையையுடைய உயர் அதிகார ஸ்தாபனமாகும்.
3) சமூகத்திலுள்ள ஏனைய நிறுவனங்களுள் ஒன்று மட்டுமாகும்.
4) சகல சமூக விஞ்ஞானங்களினதும் மையக்கருவாக காணப்படுகின்றது.
5) தோற்றம் அதிகாரம் செயற்பாடு மற்றும் நிலை என்பவற்றில் அரசாங்கத்திற்கு ஈடானதாகும்.
(…..)

04) அரசாங்கம் என்பது
1) ஜனநாயக முறைகளில் காணப்படுகின்ற மக்களின் ஏகப்பிரதிநியாகும்
2) அனைத்தாண்மை முறைகளில் காலத்திற்கு காலம் மக்களால் தெரிவு செய்யப்படும் அமைப்பு ஆகும்.
3) பாசிசவாதிகளால் பொது சமூக நலஸ்தாபனமாக கருதப்பட்டது.
4) கட்டாய உறுப்புரிமையை கொண்ட அமைப்பு ஆகும்.
5) அரசின் அரசியல் தளமாகவும் அரசின் மூலக்கூறாகவும் காணப்படுகிறது. (…..)

05) இறைமை என்பது

1) நிலப்பரப்பு, சனத்தொகை, அதிகார பலம் என்பவற்றினடிப்படையில் வேறுபட்ட அரசுகளிடையே அசமத்துவத்தினை ஏற்படுத்துகின்றது.
2) நீதித்துறை மற்றும் நிறைவேற்றுத்துறைகளினூடாக அரசினால் பிரயோகிக்கப்படுகிறது.
3) சமூக சுயேட்சை சங்கங்களின் மீயுயர் அதிகாரமாகும்.
4) தற்போது உலகமயமாக்கம், சமஸ்டிவாதம் என்பவற்றால் சவாலுக்கு உட்பட்டு காணப்படுகின்றது.
5) அரசத்துவத்திற்கு அவசியமானதொரு நிபந்தனையாகக் கொள்ளப்படுவதில்லை. (…..)

06) பாசிசவாத கருத்தியலானது

1) சட்டவாட்சியின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது.
2) ஆணை அதிகாரம் கடவுளின் உருவாக்கமாகும் என்பதை வலியுறுத்துகிறது.
3) தேசங்களின் இனமேன்மையை ஆதரிக்கின்றது.
4) மக்களுக்கு மேன்மை ஸ்தானத்தை வழங்குகின்றது.
5) சமூக சமத்துவத்தையும் சுதந்திரத்தையும் அங்கீகரிக்கின்றது. (…..)

07) அரசின் வகிபங்கானது

1) பங்கீட்டு நீதியின் அடிப்படையில் மக்களுக்கு சேவையாற்றுதல்
2) மனிதரின் ஆண்மீக வாழ்வினை மேம்படுத்துதல்
3) தேசிய பொருளாதாரம், சமூகபாதுகாப்பு என்பவற்றை பேணுதல்
4) சமூக உயர்வரப்பிரசாதங்களைப் பெற்ற குழுவிற்கு விசேட சேவையாற்றுதல்
5) சட்டம், ஒழுங்கினை பேணுவதுடன் வரையறுக்கப்பட்டிருத்தல் (…..)

08) மோதல் (முரண்பாடு) தொடர்பான எளிய வகைப்படுத்தலுக்குள் உள்ளடங்குவது

1) அரச நிர்மான மோதல்கள்
2) ஆக்கபூர்வமான மோதல்கள்
3) தனிநபர்களுக்கிடையிலான மோதல்கள்
4) அரசுக்குள்ளான மோதல்கள்
5) தேசங்களுக்கிடையிலான மோதல்கள் (…..)

09) அதிகார வேறாக்கம் தொடர்பான தத்துவமானது

1) நவீன அரசுகளில் பூரணமான அதிகார வேறாக்கம் சாத்தியமானதாகும் என்பதை எடுத்தியம்புகின்றது.
2) அரசாங்கத்தின் பிரதான கடமைகளை பகிர்தல் தொடர்பானது.
3) இது பாசிசம் மற்றும் கொம்யூனிசத்தின் கீழும் சிறப்பாக பின்பற்றப்படுகிறது.
4) இவ் எண்ணக்கருவின் முன்னோடியின் நோக்கம் அரச அதிகாரத்தை மேம்படுத்துவதாகும்
5) இவ் எண்ணக்கரு தாராள ஜனநாயகத்துக்கு இன்றியமையாத தீவினையாகும். (…..)

10) அரசியலை கற்பதற்கான அரசியல் பொருளாதார அணுகுமுறை என்பது

1) தாராள அரசியல் ஜனநாயகதத்துவத்துடன் தொடர்புபடுத்தப்படுகிறது.
2) பெண்களை துன்பத்திற்கு உள்ளாக்கும் அரசியல், பொருளாதார, சமூக, கலாச்சார கருத்தியல் கட்டமைப்புக்களை ஆய்வு செய்கின்றது.
3) சமூகத்தில் காணப்படும் அதிகாரக் கட்டமைப்புக்களை நியாயப்படுத்துகின்றது.
4) அரசியலின் பொருளாதார, சமூக, வர்க்க அடிப்படைகளின் முக்கியத்துவத்தின் மீது கவனம் செலுத்துகின்றது.
5) 1930 மற்றும் 1940 தசாப்தங்களிலும் அமெரிக்க அரசறிவியலாளர் குழுவினால் தோற்று விக்கப்பட்டதாகும். (…..)

11) ஜனாதிபதி அரசாங்க முறை என்பது

1) அதிகம் ஜனநாயகமயமானதும் செயற்திறன் குன்றியதுமான அரசாங்க முறையாகும்.
2) சட்டத்துறைக்கு பொறுப்புடைய நிறைவேற்றுத்துறை தோற்றம் பெற வழிவகுக்கின்றது.
3) நிறைவேற்றுத்துறையின் இருப்பு சட்டத்துறையின் விருப்பில் தங்கியுள்ளது என்பதை வலியுறுத்துகின்றது.
4) நாம நிறைவேற்றாளரான ஜனாதிபதி அரசின் தலைவர் மற்றும் அரசாங்கத்தின் தலைவர் என்னும் இரு வகிபங்கினை ஆற்றுகின்றமை.
5) நிறைவேற்றுத்துறையின் உறுதித்தன்மையால் பலமான அரசாங்க முறையாக கருதப்படுகின்றது. (…..)

12) ஐக்கிய அமெரிக்க அரசியலமைப்பானது

1) மக்களால் நேரடியாக தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி மற்றும் பிரதமரால் நிறைவேற்றுத்துறை அதிகாரங்கள் பிரயோகிக்கப்படல்.
2) காங்கிரஸ் மன்றில் இருந்து தெரிவு செய்யப்பட்ட நிறைவேற்றுத்துறையின் இருப்பிற்கு முக்கியத்துவம் வழங்கியுள்ளது.
3) மத்திய அரசாங்கத்திற்கென ஒதுக்கப்பட்ட அதிகாரங்களை பட்டியல் படுத்தி இருப்பதுடன் ஏனைய எஞ்சிய அதிகாரங்களை மாநிலங்கள் பெற வழிவகுத்துள்ளது.
4) காங்கிரசால் முன்வைக்கப்படும் நம்பிக்கையில்லா பிரேரனை மூலம் ஜனாதிபதியை பதவியில் இருந்து அகற்றுவதற்கு வழி செய்துள்ளது (……)

13) சுவிற்சிலாந்தின் அரசாங்க முறை

1) அதிகாரங்கள் மையப்படுத்தப்பட்ட மத்திய அரசாங்க பொறி முறையைக் கொண்டதாகும்.
2) ஒற்றையாட்சிப் பண்புகளும், சமஸ்டிப் பண்புகளும் கலந்த அரசாங்க முறையாகும்.
3) இரு மன்றுகளையுடைய சமஸ்டிப் பேரவையை கொண்டமைந்துள்ளது.
4) பங்கீட்டு ஆட்சி மற்றும் சுயாட்சி என்பவற்றினை இலகுபடுத்தும் அரசியலமைப்பு மூலதத்துவங்களைக் கொண்டதாகும்.
5) ஒருமைத்தன்மையான/ அல்லது ஓரங்கசட்ட மன்றினைக் கொண்டுள்ளது. (……)

14) தாராள ஜனநாயக அரசாங்கத்தின் பண்புகளாவன

1) அரசின் கட்டுப்பாட்டுக்குட்பட்ட பொருளாதார கட்டமைப்பு
2) தன்னிச்சையானதும் தடைகளற்றதுமான அரச அதிகாரம்
3) தனி முதன்மை அதிகாரம் ஒரு தனி நபரிடம் குவிந்திருத்தல்
4) சமூகம் மற்றும் தனி மனித இருப்பின் சகல பகுதிகளிலும் பரவிய அரசின் மீயுயர் கட்டுப்பாடுகள்
5) சர்வசன வாக்குரிமையையும் அரசியல் பன்மைவாதத்தின் ஏற்புடமையையும் அடிப்படையாகக் கொண்ட காலாகாலத்தேர்தல்கள் (……)

15) யாப்புறு வாதம் என்பது

1) அனைத்தாண்மை முறைகளுடன் மட்டுப்படுத்தப்பட்ட எண்ணக்கருவாகும்.
2) பிரதிநிதித்துவ ஜனநாயக பாரம்பரியத்திற்கு முரனானதாகும்.
3) அரசாங்க அதிகாரத்தை மட்டும் வரையறை செய்வதுடன் தொடர்பானதாகும்.
4) பிரஜைகளின் அடிப்படை உரிமைகளையும் மற்றும் சுதந்திரத்தினையும் பாதுகாக்கின்றது.
5) சட்டவாட்சி, நீதித்துறையின் சுதந்திரம் என்பன இதனை பலவீனப்படுத்துகின்றது.

(…..)

16) சட்டத்தின் ஆட்சி என்பது

1) பொறுப்புக் கூறலில் இருந்து விடுபட்ட அரசியல் அதிகாரத்தை வலியுறுத்துகின்றது.
2) ஆட்சியாளனின் தடைகளற்ற அதிகாரப் பிரயோகத்திற்கு வழிவகுக்கின்றது.
3) ஆட்சியாளர்களுக்கு விடுபாட்டுரிமையினை உறுதி செய்கின்றது.
4) பெரும்பான்மையோரின் விருப்பத்தினை பிரதிபலிக்கும் அரசாங்க தீர்மானங்களை வலியுறுத்துகின்றது.
5) எதேச்சை / சர்வாதிகார ஆட்சி உருவாவதை தடுப்பதை நோக்கமாக கொண்டது. (…..)

17) சமஸ்டி அரசாங்கம் என்பது

1) ஒரு தனித்த அதிகார நிலையத்தினை தளமாக கொண்டமைந்ததாகும்.
2) பலமட்டங்களிலான அரசாங்கங்களுக்கிடையில் யாப்புசார் அதிகார பகிர்வினை அடிப்படையாக கொண்டதாகும்.
3) ஒருமைத்தன்மையான சமூகங்களையுடைய நாடுகளுக்கு பொருத்தமானது எனக் கருதப்படுகிறது.
4) ஒரு தனித்த நிர்வாகம் மற்றும் நீதி முறையினை பேணுவதற்கு உதவுகின்றது.
5) தேசிய அரசியலை நோக்கமாகக் கொண்டு தேசிய ஒருமைப்பாட்டினை விருத்தி செய்ய உதவுகின்றது. (……)

18) அனைத்தாண்மை அரசாங்க முறையின் பிரதான பண்பாக அமைவது
1) ஒழுங்கமைந்த குழுக்களும் நலன்களும் சுதந்திரத்தை அனுபவிக்கும் ஆரோக்கியமான சிவில் சமூகம் காணப்படல்
2) ஆட்சியாளன் சட்டத்திற்கு மேலானவனாகவும் யாப்பு வரையறைகளுக்கு அப்பாற்பட்டவனாகவும் காணப்படல்.
3) தனிக்கட்சி ஆதிக்கத்துடன் கூடிய போட்டிக்கட்சி முறை காணப்படல்
4) நீதித் துறையின் சுதந்திரத்துடன் கூடிய சட்டவாட்சியை அடிப்படையாகக் கொண்ட யாப்பு சார் அரசாங்கம் காணப்படல்
5) சிவில் சுதந்திரம், தனிமனித உரிமை மற்றும் ஊடகச் சுதந்திரம் என்பன உறுதிப்படுத்தப்பட்டு காணப்படல். (…..)

19) அரசியல் கட்சிகள் என்பது
1) கொம்யூனிச முறைகளில் போட்டித்தன்மையுடன் செயற்படுகின்றன.
2) மக்களாட்சி முறையில் பிரிக்க முடியாத ஒரு தீவினையாகும்.
3) அரசியல் பொருளாதார கருத்தியலின் படி ஒன்றுக்கொன்று வேறுபடுகின்றன.
4) விசேட நலன்களை அடைந்து கொள்ளும் எத்தனங்களாகும்.
5) கிரேக்க நகர அரசுகளை உருவாக்கத்தளமாக கொண்டுள்ளன. (…...)

20) அமுக்க குழுக்கள் என்பது
1) அரச அதிகாரத்தை கைப்பற்றுவதற்கு ஒழுங்குபடுத்தப்பட்ட மக்கள் குழுக்களாகும்
2) அரசியல் கட்சிகளுக்கு சமமான நோக்கத்திற்காக ஒழுங்கமைக்கப்பட்டுள்ள மக்கள் குழுக்களாகும்.
3) அழுத்தக்குழுக்கள், ஆசைக்குழுக்கள், நியாயப்பிரச்சாரக் குழுக்கள் எனவும் அழைக்கப்படுகின்றன.
4) அரசியல் அதிகாரத்தை கைப்பற்றுதல், தக்கவைத்தல், நடைமுறைப்படுத்துதல் என்பதனை நோக்கமாக கொண்ட குழுக்களாகும்.
5) மக்கள் பிரிதிநிதிகளை தெரிவு செய்யும் எத்தனங்களாகும். (……)

- **21 தொடக்கம் 25 வரையிலான வினாக்களுக்கு தரப்பட்டுள்ள கூற்றுக்களில் இருந்து சரியான கூற்றுத் தொகுதியினைக் கொண்ட விடையை தெரிவு செய்க.**

21) 1833 கோல்புறூக்கமறன் சீர்திருத்தங்களுடன் தொர்டபான சரியான கூற்றுத் தொகுதியை தெரிவு செய்க.
A- முதலாழித்துவப் பொருளாதார முறையின் அபிவிருத்திக்கான தளத்தினை இட்டன.
B- சுயாதீனமான நீதித்துறையினதும் நிர்வாகததுறையினதும் அபிவிருத்திக்கான தளத்தினை இட்டன.
C- ஓர் ஐக்கிய அரசினை நிர்மானிப்பதற்கான தளத்தினை இட்டன.
D- தேசாதிபதியின் அதிகாரங்களை இழிவளவாக்குவதற்கு பங்காற்றின.
E- பிரதேச ரீதியான பிரதிநிதித்துவத்திற்கான தளத்தினை உருவாக்கியது
(1) A,B,C,D (2) A,B,C,E (3) A,B,D,E (4) A,C,D,E (5) B,C,D,E
(…..)

22) இலங்கையின் வென்ற்மின்ஸ்டர் மாதிரி அரசாங்க முறையுடன் தொடர்பான சரியான கூற்றுக்களின் தொகுதி
A- 1947 மற்றும் 1972 அரசியலமைப்புகளில் பின்பற்றப்பட்டது
B- கபினற் அமைச்சர்களின் கூட்டுப் பொறுப்புக்கான ஏற்பாடுகளை வழங்கியது
C- அரசின் தலைவரை மக்கள் நேரடியாக தெரிவு செய்ய வழிவகுத்தது
D- சட்டத்துறையில் இருந்து தெரிவு செய்யப்படும் நிறைவேற்றுத்துறை உருவாக காலாகியது.
E- அரசின் தலைவர்,அரசாங்கத்தின் தலைவர் என்னும் இரு பதவிகளும் இரு வேறு பிரதானிகளால் மேற்கொள்ள வழிவகுத்தது.
(1) A,B,C,D (2) A,B,C,E (3) A,B,D,E (4) A,C,D,E (5) B,C,D,E
(…..)

23) 1931 டொனமூர் அரசியலமைப்பானது
A- மந்திரிசபையில் கூட்டுப்பொறுப்பு உருவாக வழிவகுத்தது.
B- ஜனநாயக அரசாங்கத்திற்கான அடித்தளத்தினை இட்டது.

C- வகுப்புவாரி பிரதிநிதித்துவ முறையின் ஒழிவிற்கு காரணமாகியது

D- அரசியல் வாதிகளின் இருப்பு மக்களின் விருப்பத்திற்குட்பட்டதாக காணப்பட வழிவகுத்தது.

E- சில்லோராட்சி அரசியல் உரிமை இல்லாதொழிய வழிவகுத்தது.

(1) A,B,C,D (2) A,B,C,E (3) A,B,D,E (4) A,C,D,E (5) B,CD,E

(…..)

24) 1947 சோல்பரி அரசியலமைப்பானது

A- ஈரங்க சட்டமன்றத்தினை தோற்றுவித்தது.

B- சட்டத்துறையின் கட்டுப்பாட்டிற்குட்பட்ட நாம நிறைவேற்றாளரை அரசின் தலைவராக அறிமுகம் செய்தது

C- பகிர்ங்க சேவை செயற்பாடுகள் சுயாதீனமாக செயற்பட வழிவகுத்தது

D- நிலப்பரப்பு, குடித்தொகை என்பவற்றை அடிப்படையாக கொண்ட தேர்தல் தொகுதிகள் பிரிபட காரணமாகியது.

E- பிரதமர் தலைமையிலான கபினற்றின் செயற்பாடுகளுக்கு வழிவகுத்து.

(1) A,B,C,D (2) A,B,C,E (3) A,B,D,E (4) A,C,D,E (5) B,C,D,E

(…..)

25) 1972 முதலாம் குடியரசு யாப்பானது

A- மீயுயர் அதிகாரமுடைய சட்டசபையாக தேசிய அரசுப் பேரவையை தோற்றுவித்தது

B- இலங்கையை ஒரு குடியரசாக உருவாக வழிவகுத்தது

C- பிரித்தானிய அரசுடனான யாப்புசார் தொடர்புகளை வேரறுத்தது

D- மக்களால் தெரிவு செய்யப்பட்ட மற்றும் நியமன உறுப்பினர்களைக் கொண்ட சட்டமன்றம் செயற்பட அனுமதித்தது

E- உண்மைநிறைவேற்றாளரால் நியமிக்கப்பட்ட நாம நிறைவேற்றாளர் அரசின் தலைவராக செயற்பட வழிவகுத்தது

(1) A,B,C,D (2) A,B,C,E (3) A,B,D,E (4) A,C,D,E (5) B,C,D,E

- ***26 தொடக்கம் 30 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் இரு கூற்றுக்களைக் கொண்டுள்ளது. பின்வரும் அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள (1), (2), (3), (4), (5) ஆகிய விடைகளில் இருந்து பின்வரும் இரு கூற்றுக்களுக்கும் மிகச் சரியாகப் பொருந்தும் விடையின் இலக்கத்தினைத் தெரிவு செய்து அடைப்புக்குறிக்குள் எழுதுக.***

| இலக்கம் | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| (1) | உண்மை | உண்மை |
| (2) | உண்மை | பொய் |
| (3) | பொய் | உண்மை |
| (4) | பொய் | பொய் |
| (5) | உண்மை | உண்மையாக இருப்பதுடன் முதலாவது கூற்றை மேலும் விபரிக்கின்றது |

| முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|
| 26) பிரித்தானிய அரசாங்க முறையில் மரபுகள், சம்பிரதாயங்கள் அரசியலமைப்பின் பகுதிகளாக காணப்படுகிறது. | பிரித்தானிய அரசாங்கமாதிரியானது பாராளுமன்ற இறைமை, கூட்டுப்பொறுப்பு ஆகியதத்துவங்களால் வழிநடாத்தப்படுகிறது. (…..) |
| 27) பிரான்சின் ஐந்தாம் குடியரசு அரசியலமைப்பின் கீழ் கலப்பு நிறைவேற்றுத்துறை காணப்படுவதுடன் இங்கு ஜனாதிபதி தேர்வளார் கழகம் ஒன்றின் மூலம் தெரிவு செய்யப்படுகிறார். | பிரான்சின் நிறைவேற்று அதிகாரம் ஜனாதிபதி, பிரதமர் ஆகிய இரு பிரதானிகளாலும் பிரயோகிக்கப்படுகின்றது (……) |

| | |
|---|---|
| 28) சோல்பரி அரசியலமைப்பின் கீழ் சுயாதீன மாக செயற்பட்ட பொதுச் சேவையானது முதலாம் குடியரசுயாப்பில் அரசியல் மயமாக்கத் திற்கு உள்ளாகியது | முதலாம் குடியரசு யாப்பில் பொதுச்சேவை நியமனம், பதவிஉயர்வு, இடமாற்றம் ஒழுக்காற்று செயற்பாடு, பதவிநீக்கம் என்பன அமைச்சர்களுக்கு பொறுப்பாக்கப்பட்டதுடன் அரசியல் மயப்பட வழிவகுத்தது. (……) |
| 29) 1910 குறுமக்கலம் சீர்திருத்தத்தில் அறிமுகப் படுத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமை பிரதிநிதித்துவ அரசாங்க மாதிரிக்கான அடித்தாளத்தை ஏற்படுத்தியது | 1920 மனிங்சீர்திருத்தத்தில் பிரதேசவாரி பிரதிநிதித்துவ முறையானது மேலும் அபிவிருத்தி செய்யப்பட்டு மகாணரீதியான பிரதிநிதித்துவ முறைக்கு வலிகோலியதுடன் இனவாரிப் பிரதிநிதித்துவ முறையும் இல்லாது ஒழிக்கப்பட்டது. (……) |
| 30) 1972ம்ஆண்டு முதலாம் குடியரசு அரசியலமைப்பின் கீழ் நீதிப்புனராய்வு அதிகாரம் அரசியலமைப்பு நீதிமன்றத்திற்கு வழங்கப்பட்டிருந்தது | 1972ம்ஆண்டு முதலாம் குடியரசு அரசியலமைப்பு அடிப்படை உரிமைகளை பூரண சுதந்திரத்துடனும் சட்டப்பாதுகாப்புடனும் மக்கள் அனுபவிக்க வழிவகுத்திருந்தது. (……) |

## பகுதி - B

31) மெய்யியல் ஆய்வில் ஈடுபட்டுள்ள அரசியல் சிந்தனையாளர்களில் கிரேக்க காலமளவில் பழமையான சிந்தனையாளர்கள் **இருவரின்** பெயரினை குறிப்பிடுக.

(1) ……………………………………………………………………………………………..

(2) ……………………………………………………………………………………………..

32) 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் நவீன அரசறிவியலினதும் சமூகவியல் கோட்பாடுகளினதும் முன்னோடிகளாக விளங்கிய **இரண்டு** சிந்தனையாளர்களைக் குறிப்பிடுக.

(1) ……………………………………………………………………………………………..

(2) ……………………………………………………………………………………………..

33) 20ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் ஐரோப்பா, அமெரிக்கா போன்றவற்றில் அரசியல் கட்சி தோற்றம் பெற்று செயற்பட **இரண்டு** பிரதான காரணிகள் பங்காற்றின அவை இரண்டினையும் குறிப்பிடுக.

(1) ……………………………………………………………………………………………..

(2) ……………………………………………………………………………………………..

34) 1) "அரசு சமூக நிறுவனமாவதோடு மனிதர்களின் உயர்வான பொது நலனுக்காக செயற்படுவதால் அது ஏனைய சமூக நிறுவனங்களை விட உயர்வானது"

2) "அரசு என்பது வரையறுக்கப்பட்ட ஆள்புல பிரதேசத்தில் பலாத்கார/ கட்டாயப்படுத்தல் அதிகாரத்தை வெளிப்படையாக பயன்படுத்தும் தனியுரிமை தமக்கே உள்ளது எனக் கூறும் மனிதக்குழுவாகும்"

மேற்கூறப்பட்டவை அரசு என்பது சமூகத்தில் காணப்படும் மிக உயர்ந்த மானிட அமைப்பு ஆகும் என்பதனை விளக்கும் கருத்தாகும் இக்கருத்துடன் தொடர்புபட்ட **இரண்டு** அரசியல் சிந்தனையாளர்களை முறையே குறிப்பிடுக.

(1) ……………………………………………………………………………………………

(2) ……………………………………………………………………………………………

35) புராதன கிரேக்க நகர அரசுகளில் பல்வேறு அரசியல் (அரச முறைகள்) மாதிரிகள் அபிவிருத்தி அடைந்திருந்தன. அவற்றுள் **இரண்டு** மாதிரிகளை குறிப்பிடுக.

(1) ……………………………………………………………………………………………………

(2) ……………………………………………………………………………………………………

36) இந்திய அரசியலமைப்பின் பிரகாரம் அவசரகால நிலை பிரகடனப்படுத்தப்படுவதற்கு மூன்று நிலைமைகள் அடிப்படையாக அமைகின்றன. அவற்றுள் **இரண்டு** நிலைமைகள்/ சந்தற்பங்களை குறிப்பிடுக.

(1) ……………………………………………………………………………………………………

(2) ……………………………………………………………………………………………………

37) 1) அரச அதிகாரத்தை வேறாக்குதலை அல்லது ஒன்றுகுவிதலை அடிப்படையாகக் கொண்ட அரசாங்க மாதிரிகளுள் **ஒன்றினை** குறிப்பிடுக.

2) நிறைவேற்று அதிகாரத்தை ஒழுங்கமைத்தல் அடிப்படையில் நிலைபெறும் அரசாங்க மாதிரிகளுள் **ஒன்றினையும்** குறிப்பிடுக.

(1) ……………………………………………………………………………………………………..

(2) ……………………………………………………………………………………………………..

38) ''புரட்சிகர சமவுடமைக்கு'' சமாந்தரமாக ''மூன்றாம் உலக நாடுகளின் சமவுடமைவாதம்'' என்ற கருத்து கட்டி எழுப்பப்பட காரணமாக அமைந்த சிந்தனையாளர்களில் **இருவரைக்** குறிப்பிடுக.

(1) ……………………………………………………………………………………………………

(2) ……………………………………………………………………………………………………

39) தேசியவாத சிந்தனையாளர்களால் முன்வைக்கப்படும் ''தேசிய அடையாள சின்னங்களாக'' குறிப்பிடப்படுவற்றில் **இரண்டினை** குறிப்பிடுக.

(1) ……………………………………………………………………………………………………

(2) ……………………………………………………………………………………………………

40) மோதலை தடுப்பதற்கு பிரதானமாக இரண்டு வழிமுறைகள் காணப்படுகின்றன அவ் **இரண்டு** வழிமுறைகளையும் குறிப்பிடுக.

(1) ……………………………………………………………………………………………………

(2) ……………………………………………………………………………………………………

41) முரண்பாடு தொடர்பான வகைப்பாடுகளுள் அரசியல் வகைப்பாட்டினுள் உள்ளடங்கும் **இரண்டு** வகைப்பாடுகளைக் குறிப்பிடுக.

(1) ……………………………………………………………………………………………………

(2) ……………………………………………………………………………………………………

42) காலணித்துவ ஆட்சி முறை தோற்றம் பெறுவதற்கு இரண்டு வழிமுறைகள் காணப்படுகின்றன அந்த **இரண்டு** வழிமுறைகளையும் குறிப்பிடுக.

(1) ……………………………………………………………………………………………………

(2) ……………………………………………………………………………………………………

43) இலங்கையில்
   1) சுயாதீனமான ஊழியச் சந்தையின் உருவாக்கம்
   2) கபினற் அரசாங்க முறைக்கான அடித்தளமிடல்
   என்பவற்கு வழிவகுத்த கோல்புருக் - கமரன் ஆணைக்குழுவினரின் **இரண்டு** சிபார்சுகளைக் குறிப்பிடுக.
   (1) ……………………………………………………………………………...…………………..
   (2) ……………………………………………………………………………...…………………..

44) இலங்கையில்
   1) மட்டுப்படுத்தப்பட்ட வாக்குரிமை
   2) மகாணரீதியான பிரதிநிதித்துவம்
   என்பவற்றுக்கு வழிவகுத்த அரசியலமைப்பு சீர்திருத்தங்கள் **இரண்டினையும்** முறையே குறிப்பிடுக.
   (1) ……………………………………………………………………………...…………………..
   (2) ……………………………………………………………………………...…………………..

45) 1931 டொனமூர் அரசியல் யாப்பின் கீழ் தாபிக்கப்பட்ட அரசுக்கழத்திற்கு **இரண்டு** வகிபாகங்கள் ஒப்படைக்கப்பட்டிருந்தன. **அவ்விரு** வகிபாகங்களையும் பெயரிடுக.
   (1) ……………………………………………………………………………...………………………
   (2) ……………………………………………………………………………...………………………

46) 1947ம் ஆண்டு சோல்பரி அரசியலமைப்பின் கீழ்இலங்கை பாராளுமன்றம் மூன்று நிறுவனங்களைக் கொண்டிருந்தது. அவற்றுள் **இரண்டு** நிறுவனங்களைக் குறிப்பிடுக.
   (1) ……………………………………………………………………………...………………………
   (2) ……………………………………………………………………………...………………………

47) 1) "சட்டம் சகலருக்கும் சமமாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும்"
   2) "அரசாங்க அதிகாரம் குறித்தவொரு நிறுவனத்தில் குவிமையப்படுவதை தடுப்பதன் மூலம் தனியாள் சுதந்திரத்தை பாதுகாக்க முடியும்"
   இவ்விரு கூற்றுக்களுடனும் தொடர்புபடும் தாராள ஜனநாயக எண்ணக்கருக்கள் **இரண்டினையும்** முறையே குறிப்பிடுக.
   (1) ……………………………………………………………………….....…………………...
   (2) ……………………………………………………………………….....…………………...

48) ஜனநாயக தேர்தல் முறைகளின் மூலம் பாதுகாக்கப்பட வேண்டிய பல நியதிகள் காணப்படுகின்றன அவற்றுள் **இரண்டு** நியதிகளைக் குறிப்பிடுக.
   (1) ……………………………………………………………………………...………………….........
   (2) ……………………………………………………………………………...………………….........

49) 1970ம் ஆண்டு இலங்கையில் பதவிக்கு வந்த ஐக்கிய முன்னணி அரசாங்கம் மூன்று அரசியல் கட்சிகளைக் கொண்ட கூட்டணியாக காணப்பட்டது அதில் கூட்டிணைந்த **இரு** கட்சிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
   (1) ……………………………………………………………………………...………………….........
   (2) ……………………………………………………………………………...………………….........

50) சுதந்திர இலங்கையின் முதலாவது மகாதேசாதிபதி மற்றும் முதலாவது ஜனாதிபதி ஆகியோரின் பெயர்களைக் குறிப்பிடுக.
   (1) ……………………………………………………………………………...………………….........
   (2) ……………………………………………………………………………...………………….........

**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**
**நான்காம் தவணைப் பரீட்சை - 2022**
**Conducted by Field Work Centre, Thondaimanaru.**
**4th Term Examination – 2022**

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| அரசியல் விஞ்ஞானம் II<br>Political Science II | Three Hours<br>Gr -13 (2022) | 23 | T | II |

❖ **இவ்வினாத்தாள் I, II, III என மூன்று பகுதிகளைக் கொண்டுள்ளது.** பகுதி 1 லிருந்து குறைந்தபட்சம் ஒரு வினாவும் பகுதி இரண்டிலிருந்து குறைந்த பட்சம் இரண்டு வினாக்களும் பகுதி 3 லிருந்து குறைந்தபட்சம் ஒரு வினாவும் தெரிவு செய்தல் வேண்டும். மற்றும் பகுதி 1, 2, 3 என்பவற்றில் இருந்து விரும்பிய ஒரு வினாவினைத் தெரிவு செய்து எல்லாமாக 5 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும்.

## பகுதி - I

1. அரசியலைக் கற்பதற்கான நடத்தை வாத அணுகுமுறையினை விபரிக்குக. (20 புள்ளிகள்)

2. அ) அரசாங்கம் அரசில் இருந்து எவ்வாறு வேறுபடுகிறது. (5 புள்ளிகள்)

   ஆ) நவீன ஆள்புல அரசு நான்கு பிரதான மூலக்கூறுகளின் கீழ் ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது அவற்றை விபரிக்குக. (15 புள்ளிகள்)

3. அ) அரசியல் கோட்பாடு என்பதனை வரையறை செய்க. (5 புள்ளிகள்)

   ஆ) ஓர் அரசியல் கருத்தியல் என்ற வகையில் சமூக ஜனநாயகத்தினை விபரிக்குக. (15 புள்ளிகள்)

## பகுதி - II

4. "இலங்கையின் ஜனநாயக ஆட்சியில் ஒரு புதிய சகாப்தத்தின் தொடக்கத்தினை டொனமூர் சீர்திருத்தங்கள் குறித்து நின்றன" ஆராய்க. (20 புள்ளிகள்)

5. அ) சோல்பரி யாப்பின் கீழான சட்டத்துறை

   ஆ) சோல்பரி யாப்பினூடான நாம நிறைவேற்றாளர் என்பன பற்றி ஆராய்க.

   (10 x 2 = 20 புள்ளிகள்)

6. 1947 சோல்பரி யாப்பின் கீழும் 1972 முதலாம் குடியரசு யாப்பின் கீழும் நீதித்துறையின் சுதந்திரம் பற்றிய ஏற்பாடுகளை ஆராய்க. *(20 புள்ளிகள்)*

7. அ) மோதல் செயற்பாடு தொடர்பாக காணப்படும் இரு பிரதான அணுகுமுறைகளை சுருக்கமாக கூறுக. *(5 புள்ளிகள்)*

ஆ) உள்ளக மோதல்கள் தோன்றுவதற்கான காரணிகளை குறிப்பிட்டு விபரிக்குக. *(10 புள்ளிகள்)*

இ) மோதல் தீர்வு ஊடகமான சமாதான உடன்படிக்கை என்பதை சுருக்கமாக விளக்குக. *(5 புள்ளிகள்)*

## பகுதி – III

8. அமெரிக்க சமஷ்டி அரசியலமைப்பின் பிரதான பண்புகளை விபரிக்குக.. *(20 புள்ளிகள்)*

9. அ) அதிகாரப்பகிர்வின் அடிப்படையில் அரசியலமைப்புக்களை வகைப்படுத்தி வரைவிலக்கணப்படுத்துக. *(5 புள்ளிகள்)*

ஆ) பாராளுமன்ற அரசியலமைப்பு, மற்றும் ஜனாதிபதி அரசியலமைப்பு என்பவற்றின் நிறை குறைகளை ஆராய்க. *(15 புள்ளிகள்)*

10. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்குச் சிறுகுறிப்பு எழுதுக?

i) தாராள ஜனநாயகம்

ii) சட்டத்தின் ஆட்சி

iii) அரசியல் கட்சிகளின் பணிகள்

iv) சிவில் சமூகம்

(10x2=20 புள்ளிகள்)